

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் நாமக்கல் கிழக்கு மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயம் இனமானப் பேராசிரியர் கூட்டரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு கூட்டப் பொருள் குறித்து விளக்கம் அளித்து பேசினார். இதில் மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியில் எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி திருவரங்குளம் கிழக்கு ஒன்றியம் நெடுவாசல் கிழக்கு ஊராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் அனைத்து பொதுமக்களுக்கும் கட்சி பேதமின்றி சிறப்பு பரிசுத் தொகுப்பினை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்ய நாதன் வழங்கினார். இந்நிகழ்வில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே.பி.கே.டி.தங்கமணி, கே.எஸ்.ரவி, நெடுவாசல் ஊராட்சி மன்ற தலைவர் தெட்சிணாமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

# கோவை சட்டமன்றத் தொகுதிகளுக்கான உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தலைமையில் நடைபெற்றது!

கோவை, பிப். 17

காந்திபுரம், வடகோவை, குறுக்கு வெட்டு சாலையில் உள்ள கோவை மாவட்டக் கழக அலுவலகத்தில், கோவை நாடாளுமன்றத் தொகுதிக் குட்பட்ட, கோவை வடக்கு, கோவை தெற்கு, சிங்காநல்லூர், கவுண்டம்பாளையம், சூலூர் சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கூட்டம்,

கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம் 1:

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,

தி.மு.கழக இளைஞரணிச் செயலாளர் தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின் படி,

தமிழ்நாடு வீட்டு வசதித் துறை, நகர்ப்புற வளர்ச்சித் துறை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி வழிகாட்டுதலில்,

இன்று (17.02.2024 - சனிக்கிழமை), மாலை 4.30 மணியளவில், கோவை கொடீசியா மைதானத்தில், நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, முதல் கட்டமாக நடைபெற உள்ள, கோவை நாடாளுமன்றத் தொகுதியின், மாபெரும் பரப்புரைக் கூட்டத்தில், நாடாளுமன்றத் தேர்தல் 2024, “உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்” என்ற தலைப்பில்,

தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்டெடுக்க, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில், கோவை நாடாளுமன்றத் தொகுதிக் குட்பட்ட, அனைத்து மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக்கழக நிர்வாகிகள், மேயர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகரக் கழக, ஒன்றியக் கழக, பகுதிக் கழக, பேரூர்க்கழக, வட்டக்கழகச் செயலாளர்கள், நகராட்சி தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள், ஊராட்சி தலைவர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், நகரக் கழக, ஒன்றியக் கழக, பகுதிக்கழக, பேரூர்க் கழக, வட்டக்கழக நிர்வாகிகள், கழகச் செயல்வீரர்கள், கழகத் தொண்டர்கள், கழக உடன்பிறப்புகள், அனைத்து BLA2 பாக முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் உள்ளிட்ட பதினைந்தாயிரம் பேருக்கு மேற்பட்ட கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பங்கேற்பது என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

தீர்மானம் 2:

கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் சீரிய முறையில் நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆட்சியில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூபாய் 1,000, அனைத்து மகளிருக்கும் கட்டணமில்லா பேருந்து பயணம், கூட்டுறவு வங்கிகளில் 5 பவுன் நகைக்கடன் தள்ளுபடி, கல்லூரி மாணவிகளுக்கு மாதம் ரூபாய் 1,000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம், ரூபாய் 5 லட்சம் வரையிலான முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டுத் திட்டம், புதிதாக 1.1/2 லட்சம் விவசாயிகளின் பம்ப்செட்களுக்கு, கட்டணமில்லா மின்சாரம் இணைப்பு. மக்களைத் தேடி மருத்துவம், 18 லட்சம் பள்ளி மாணவ, மாணவியருக்கு காலை சிற்றுண்டி திட்டம், இன்னுயிர் காக்கும் 48 திட்டம் உள்ளிட்ட பல்வேறு சாதனைகளை படைத்து வரும்,

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் தலைமையில்,

கோவை நாடாளுமன்ற தொகுதியில், இலட்சக்கணக்கான வாக்கு வித்தியாசத்தில் மாபெரும் வெற்றிபெற செய்ய அனைவரும் இணைந்து இரவு பகல் பாராமல் செயல்படுவோம் என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இக்கூட்டத்தில், கோவை நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட கோவை மாநகராட்சி மேயர் கல்பனா ஆனந்தகுமார், மாவட்ட துணைச் செயலாளர்கள் பி.கே.சாமிநாதன், அசோக் ஆறுக்குட்டி, மண்டலத் தலைவர்கள் மீனாலோகு, இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், தெய்வயானை தமிழ்மறை, நிலைக் குழுத் தலைவர்கள் சாந்தி முருகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆனந்த குமார், டி.பி.சுப்பிரமணியன், பகுதிச் செயலாளர்கள்

மார்க்கெட் எம்.மனோகரன் எம்.சி., மு.சிவா எம்.சி., இரா.சேரலாதன், சூலூர் செல்வராஜ், பட்டணம் செல்வராஜ், தேவி மன்னவன், துணைத் தலைவர் கணேஷ், அபிநயா, கலா சாந்தாராம், இடிகரை ஜனார்த்தனன், என்.சேகர், எஸ்.எஸ்.குளம் கோமளவல்லி கந்தசாமி, மாமன்ற உறுப்பினர்கள்

கற்பகம், புஷ்பா மணி, நேரு நகர் பாபு, விஜயகுமார், சித்ரா மணி, தமிழ்ச் செல்வன், சுபஸ்ரீ, கிருஷ்ணமூர்த்தி, சம்பத், அம்பிகா தனபால், அன்னக்கொடி, கீதா, அம்சவேணி, சாந்தாமணி, ஆதிமகேஸ்வரி, ரேவதி, ராஜேஸ்வரி, வித்யா, கமலாவதி, ஜெயப்பிரதா தேவி, முனியம்மாள், ஷர்மிளா, சுமா, தவமணி, ரங்கநாயகி, சரண்யா, வைரமுருகன், பார்த்திபன், பேபிசுதா, பிரவீன் ராஜ், குமுதம், லட்சுமி, பத்மாவதி, வட்டக்கழகச் செயலாளர்கள் நவீன் முருகன், எஸ். போஸ், சீனிவாசன், நகராட்சி தலைவர்கள், பேரூராட்சி ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஒன்றியக் கவுன்சிலர்கள், மாவட்டக் கவுன்சிலர்கள் மற்றும் அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.



காந்திபுரம், வடகோவை, குறுக்கு வெட்டு சாலையில் உள்ள கோவை மாவட்டக் கழக அலுவலகத்தில், கோவை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட, கோவை வடக்கு, கோவை தெற்கு, சிங்காநல்லூர், கவுண்டம் பாளையம், சூலூர் சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கூட்டம், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் தலைமையில் நடைபெற்றது.

### கழக மூத்த முன்னோடி - இலக்கிய அணி மாநில இணைச் செயலாளர்

# கயல் தினகரன் மறைவு!

## கழக முன்னணியினர் - நிர்வாகிகள் - தோழர்கள் அஞ்சலி! இறுதிச் சடங்குகள் நடைபெற்றன!

**சென்னை, பிப். 17-**

**கழக இலக்கிய அணியின் மாநில இணைச் செயலாளர் கயல் தினகரன் அவர்கள், நேற்று முன்தினம் (15.2.2024 - வியாழக்கிழமை) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

சிறிது காலமாக உடல் நலம் குன்றியிருந்த அவர், சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தார். இருப்பினும் சிகிச்சை பலனின்றியும், வயது முதிர்வினாலும் இயற்கை எய்தினார். அவருக்கு வயது 88. அவரது மனைவி திருமதி சாந்தா அவர்கள். ஏற் கெனவே மறைவெய்தி விட்டார்.

கயல் தினகரன் - சாந்தா இணையருக்கு தமிழ்ச்செல்வன், செழியன் எனும் இரு புதல்வர்கள் உள்ளனர்.

அன்னார் மனறவுற்ற செய்தியறிந்து - ஏ.பி.நம்பர் 1307, 33வது தெரு, 4வது செக்டார், கலைஞர் நகர், சென்னை - 78. (ஸ்ரீ கிருஷ்ணசாமி மெட்ரிகுலேசன் மேனிலைப் பள்ளி பின்புறம்) உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னாரின் உடலுக்கு ஏராளமான கழக நிர்வாகிகளும், முன்னணியினரும், தோழர்களும், எழுத்து - இலக்கிய உலகினரும், பல்துறைப் பெருமக்களும் மலர் மாலைகள் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

ஏற்றுக்கொண்ட கொள்கையிலிருந்து எந்நாளும் வழுவிடாத தூய கழக முன்னோடியாக விளங்கிய கயல் தினகரன் அவர்களின் மறைவு, கழகத்திற்குஇழப்பு எனின் அது மிகையல்ல.

இளமைக் காலம் தொட்டே திராவிட இயக்கத்தின் மீதும் பகுத்தறிவு கொள்கைகள் மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டு தன்னை திராவிட இயக்கச் செயல்பாடுகளில் பங்கெடுத்துக்கொண்டார்.

சற்றொப்ப எழுபது ஆண்டுகளுக்கு மேலாக ஒரே இயக்கம் (தி.மு.க.) ஒரே தலைமை (கலைஞர்) என வாழ்ந்தவர். கலைஞரின் தீவிர பற்றாளர். அன்னாருடைய உடல் நேற்று (16.2.2024-வெள்ளிக் கிழமை) காலை 10 மணியளவில் இறுதி மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அவரது வாழ்க்கை வரலாறு வருமாறு:-

கயல் தினகரன் (கலைஞர் விருது) இராமநாதபுரம் மாவட்டம், தேவகோட்டை நகரத்தில் 1936ஆம் ஆண்டு பிறந்தார். தமது 31ஆம் அகவையில் தலைவர் கலைஞர் தலைமையில் திருமணம் செய்து கொண்டார்.

1952ஆம் ஆண்டில் எழுதும் வேட்கையின் விளைவாக ‘சூரியகாந்தி’ எனும் கையெழுத்து இதழினைத் தொடங்கினார்.

பின்னர் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நாடகத்தின்மீது ஏற்பட்ட ஈடுபாட்டின் காரணமாக ‘மறுமணம்’ எனும் நாடகம் எழுதி அரங்கேற்றினார். அந்த சீர்திருத்த நாடகத்தில் பெண் வேடம் பூண்டு நடிக்கவும் செய்தார்.

இவர் ‘கிளர்ச்சி, ‘சங்கப் பலகை’, ‘மனிதன்’, ‘கலைமன்றம்’, ‘காதல்’, ‘சுதந்திரன்’ ஆகிய வார இதழ்களிலும் ‘தமிழ்நாடு’ நாளிதழி லும் கதை, கட்டுரை, கவிதைகள் எழுதி வந்தார். ‘வணங்காமுடி’, ‘செட்டிநாடு’ ஆகிய வார இதழ்களின் துணை ஆசிரியராகப் பணி புரிந்துள்ளார்.

இவர் 1957ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுகள் ‘தென்றல்’, ‘முல்லை’, கண்ணப்பா வள்ளியப்பனின் “இனமுழக்கம்” ஆகிய இதழ்களின் துணை ஆசிரியராகப் பணிபுரிந்தார். சிறுகதை மன்னன் எஸ்.எஸ். தென்னரசு இவரை ஊக்கப்படுத்தி, இவரது படைப்புகளுக்கு மெருகேற்றச் செய்தார்.

1962, 63ஆம் ஆண்டுகளில் குன்றக்குடி அடிகளார் தொடங்கிய ‘தமிழ்’ மற்றும் ‘அறுவடை’ ஆகிய திங்கள் இதழ்களிலும் துணை ஆசிரியர் பொறுப்பேற்று இதழ்கள் வெளிவர துணை நின்றார்.

அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருக்கு வரவேற்பளிக்க நடைபெற்ற சென்னை கடற்கரைக் கூட்டத்தில் தினகரன் அவர்கள் தனது சொந்த முயற்சியில் தொடங்கிய ‘தென்னகத் தலைவன்’ எனும் கிழமை ஏட்டினை அறிஞர் அண்ணா வெளியிட்டார். அவ்விழாவில் கலைஞர் அவர்களுக்கு கணையாழி அணிவித்து மகிழ்ந்தார்.

இவர் 1964ஆம் ஆண்டு



முதல் பத்தாண்டு காலம் தலைவர் கலைஞர் அவர்களின் மூத்த பிள்ளையான முரசொலி மற்றும் முத்தாரம், மறவன் மடல் ஆகிய இதழ்களில் துணை ஆசிரியராக பணியாற்றினார். முரசொலி உருவாக்கிய எண்ணற்ற எழுத்தாளர்களில் தானும் ஒருவர் என்பதை எண்ணிப் பெருமைப்படுபவர்.

இவரது எழுத்துப்பணி முரசொலி ஏட்டில் தொடர்கிறது என்பதோடு, ‘அக்குடும்பத்தில் ஒருவனாகவே கலந்துள்ளேன்” என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டிருந்தார்.

இவர் 1974ஆம் ஆண்டில் செ. மாதவன் அவர்கள் தொடங்கிய ‘தமிழ் முரசு’ நாளேட்டின் ஆசிரியராகப் பொறுப்பேற்று தரமாக நடத்திக் காட்டினார்.

இவர் ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில் மெயில் ஆங்கில ஏட்டின் ஆசிரியர் இராசன் அவர்களோடு மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தார்.

1967ஆம் ஆண்டு அண்ணா முதல்வராக இருந்தபோது அண்ணாவுடன் ஒரு வாரம் என்ற தலைப்பில் சேகரித்த செய்தியை இவர் எழுதி முரசொலி பொங்கல் மலரில் வெளிவந்தது. இது வரலாற்று முக்கியம் வாய்ந்தது ஆகும். மேலும் முதல்வர் அண்ணாவின் சிறப்புக் குறித்து இவர் எழுதிய ‘மகுடமெடுத்து தமிழன்னை சூட்டினாள்’ எனும் பாடல் இசைத்தட்டாக வெளிவந்து நன்கு விற்பனை ஆனது. அறிஞர் அண்ணாவின் மனந்திறந்த பாராட்டைப் பெற்றார்.

1985ஆம் ஆண்டு புதுடெல்லியில் நடைபெற்ற அனைத்திந்திய எழுத்தாளர் சங்க மாநாட்டில் கலந்துகொண்டு ஆய்வுரை ஆற்றினார். தற்போது இவர் மாநில தி.மு.க. இலக்கிய அணியின் இணைச் செயலாளராகப் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றி வந்தார்.

கழகத் தொண்டராகிய கயல் தினகரன் அவர்களுடைய இலட்சியப் பிடிப்பையும்,பத்திரிகையாளர் பணியையும் பாராட்டுகின்ற வகையில் தலைமைக் கழகத்தின் சார்பில் 15.9.2001 அன்றுசென்னை கலைஞர் அரங்கில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கலைஞர் விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



தருமபுரி மாவட்டக் கழக அலுவலகம் தளபதி அரங்கில் தருமபுரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழக ஒருங்கிணைந்த செயல்வீரர் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர்கள் கே.மனோகரன், சி.செல்வராஜ் ஆகியோர் தலைமையில் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ. தடங்கம் பெ.சுப்ரமணி மற்றும் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் முனைவர் பி.பழனியப்பன் ஆகியோர் முன்னிலையில் நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் மற்றும் உரிமைகளை மீட்கஸ்டாலினின் குரல் மாபெரும் பொதுக்கூட்டம் குறித்து ஆலோசிக்கப்பட்டது. உடன் ஒருங்கிணைந்த மாவட்டக் கழக மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா பிகே. ராஜகோபால்

### பிப்ரவரி 17 (2002)



**திருவள்ளூர் மாவட்டம், போரூர் நகரச் செயலாளராக தொடர்ந்து முப்பது வருடங்களாக பணியாற்றியவர்.**

**சைதாப்பேட்டை கூட்டுறவு நிலவள வங்கியின் இயக்குனராகவும் பணியாற்றியவர்.**

**மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடம் சிறையில் இருந்துள்ளார்.**

**மேலும், கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை கா.ரா. சுப்பையன்

### பிப்ரவரி 17 (2019)



**தனது கல்லூரி காலங்களிலேயே கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**கோவை மாவட்டக் கழகச் செயலாளராகவும் – கழக தீர்மானக்குழுச் செயலாளராகவும், உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**கோவை நாடாளுமன்ற உறுப்பினராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**